**செய்தி வெளியீடு எண். 1013** **நாள். – 24.12.2009**

## தமிழகத்தில் மேலும் நான்கு புதிய வட்டங்கள் இரண்டு புதிய வருவாய்க் கோட்டங்கள் உருவாக்கம் !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழக சட்டப்பேரவையில், கடந்த 30.6.2009 அன்று நடைபெற்ற, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, அரசு வெளியிட்ட அறிவிப்புகளின்படி,

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆம்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக "ஆம்பூர் வட்டம்";

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, மடத்துக்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக "மடத்துக்குளம் வட்டம்";

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டத்தை மூன்றாகப் பிரித்து, ஆலந்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக "ஆலந்தூர் வட்டம்";

சோழிங்கநல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக "சோழிங்கநல்லூர் வட்டம்";

செங்கற்பட்டு வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, தாம்பரம், ஆலந்தூர், சோழிங்கநல்லூர் ஆகிய வட்டங்களை உள்ளடக்கித் தாம்பரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு "தாம்பரம் வருவாய்க் கோட்டம்";

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை ஆகிய வட்டங்களை உள்ளடக்கி உடுமலைப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக "உடுமலைப்பேட்டை வருவாய்க் கோட்டம்";

– என நான்கு புதிய வட்டங்களையும்; இரண்டு புதிய வருவாய்க் கோட்டங்களையும் உருவாக்கி, முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.